**சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

**முன்னிலை.** திரு.A.பாலகிருஷ்ணன், B.A., B.L.,

சார்பு நீதிபதி, கோபிசெட்டிபாளையம்

2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இடைக்கால மனு எண்.14/2026**

**in**

**அசல் வழக்கு எண்.157/2004**

வித்யா ... மனுதாரர்/வாதி

/இடையே/

1. வஞ்சியம்மாள்(இறப்பு)
2.ஜெயா
3.செந்தில்
4.வெங்கடேஷ்
5.கண்ணகி
6.மொட்டையன் (எ) ராமசாமி(இறப்பு)
7.தமிழ் அரசு (எ) உலகநாதன்
8.பாபு (எ) ஸ்ரீதர்
9.சிவராமன்(இறப்பு)
10.கண்ணகி
11.ஹேமா
12.சந்திரன்
13.சகுந்தலா
14.ராமகிருஷ்ணன்
15.மீனாட்சி
16.மாரியப்பன்
17.விஜயலட்சுமி
18.கிருத்திகா
19.செந்தில்
20.தங்கராஜ்
21.சீனிவாசன்
22.சிவகாமி
23.தனபாக்கியம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 04.03.2026-ம் தேதி என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.P.கார்த்திகேயன்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 2-ம் எதிர்மனுதாரர்

தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.வெங்கடாசலம்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

கோபிசெட்டிபாளையம், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.321/1991–ல் கடந்த 21.08.1998–ம் தேதியின்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.157/2004 கோப்பிற்கு வரவழைக்க உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறை விதி 74 பிரிவு 151–இன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்.**

i) வாதி பிரதிவாதிகள் பேரில் பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

ii) வாதி தரப்பில் வாதி முதன்மை விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1,2 சாட்சிகள் விசாரணை முடிவுற்று பிரதிவாதி தரப்பு 3வது சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பு 3ம் சாட்சி முதன்மை விசாரணையின்போது இடைநிலை மனு எண்.11/2025 மனுவில் விவரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை காலதாமத்துடன் ஏற்றுக் கொள்ள மனு தாக்கல் செய்யப்பட்டது.

iii) இடைநிலை மனு எண்.11/25 எதிருரையுடன் சில ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதில் கோபி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண். 321/1991ல் 21.08.1998ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் புகைப்பட நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்கள் விசாரணையின்போது சமர்ப்பித்து கொள்ள வாதியால் ரிசர்வ் செய்யப்பட்டது. ஆனால் மேற்படி அசல் வழக்கு எண்.321/1991ன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்கள் கிடைக்கப் பெறவில்லை.

iv) மேற்படி வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை நகல்கள் அசல் வழக்கு எண்.157/2004ல் பிரதிவாதி தரப்பு 3வது சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்கும் சட்டபூர்வ முடிவுக்கு உதவுவதற்கும் அவசியம் தேவைப்படுகிறது.

v) எனவே, கோபிசெட்டிபாளையம், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.321/1991–ல் கடந்த 21.08.1998–ம் தேதியின்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.157/2004 கோப்பிற்கு வரவழைக்க உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறை விதி 74 பிரிவு 151–இன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>இடைநிலை மனு எண்.13/2026 மனுவில் 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையினை இம்மனுவின் எதிருரையாக பாவிக்குமாறு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடைநிலை மனு எண்.13/2026 மனுவில் 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கும்.</u>**

(2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையானது 1 முதல் 5,9,10,11 மற்றும் 13 ஆகிய எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.)

i) மனுதாரர் மனு செல்லத்தக்கதல்ல. ஆவணம் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு EX.A12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே அதை தருவிக்க வேண்டிய அவசியமும் நியாயமும் இல்லை. DW3சாட்சியத்தை குறை கூறி மறுத்தலிக்க வாதிக்கு எந்த விதத்திலும் சாத்தியம் இல்லை. அவர் தாக்கல் செய்து உள்ள ஆவணங்கள் வாதியின் வழக்கையே தள்ளுபடி செய்யும் அளவிற்கு சக்தி வாய்ந்தவை.

ii) எனவே ஏதோ ஒரு காரணம் சொல்லி விசாரணையை முடிக்காமல் இருக்க மனுதாரர் முயற்சிக்கிறார். எனவே, மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு கூறியுள்ளார்.

4) இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**6) தற்போது தீர்மானிக்க வேண்டிய சங்கதி யாதெனில் மனுதாரரின் மனு அனுமதிக்கப்படதக்கதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.**

**<u>தீர்வு:–</u>**

i) வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii) அசல் வழக்கின் நாட்குறிப்பேட்டை பரிசீலனை செய்கையில், கடந்த 07.04.2025–ம் தேதியில் பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.3 விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி வழக்கானது பி.வா.சா.3–ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், கோபிசெட்டிபாளையம், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.321/1991 வழக்கில் கடந்த 21.08.1998–ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை இவ்வழக்கு கோப்பிற்கு தருவிக்க வேண்டி வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

iii) கோபிசெட்டிபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.321/1991 வழக்கில் கடந்த 21.08.1998 தேதியில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டிருப்பின் மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிடப்பட்ட

நகல் பெற்று அதனை இவ்வழக்கில் சான்றாவணமாக தாக்கல் செய்யலாம். ஆனால் மனுதாரர் அவ்வாறு சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்யாமல் விடுத்து அசல் வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை தருவிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

iv) எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி அசல் வழக்கின் தீர்ப்புரையானது வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என எதிருரையில் கூறப்பட்டுள்ளது. இவ்வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், கடந்த 29.08.2012–ம் தேதியில் வா.சா.1–ன் வாயிலாக கோபிசெட்டிபாளையம், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.143/1987 வழக்கின் தீர்ப்புரையின் சான்றளிக்கப்பட்ட நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

v) கோபிசெட்டிபாளையம், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.321/1991 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றளிக்கப்பட்ட நகல் தாக்கல் செய்ய இயலும் என்ற நிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் வழக்கு கோப்பில் இடம் பெற்றுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை இவ்வழக்கிற்கு வரவழைக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. அசல் வழக்கை கால தாமதப்படுத்தும் எண்ணத்தில் தான் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்புடையதாக அமைகிறது. எனவே, மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்று மேற்கண்ட பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காணுகிறது.

7) **எனவே முடிவாக,** மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மனு செலவுத்தொகையில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்து இன்று இந்த உத்தரவு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A BALAKRISHNAN Digitally signed by A BALAKRISHNAN Date: 2026.03.10 17:33:07 +0530

**சார்பு நீதிபதி,**

**கோபிசெட்டிபாளையம்.**

<u>குறிப்பு:–</u>

இருதரப்பிலும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

A BALAKRISHNAN Digitally signed by A BALAKRISHNAN Date: 2026.03.10 17:33:18 +0530

**சார்பு நீதிபதி,**

**கோபிசெட்டிபாளையம்.**